DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

CC. No. 12 of 2020
Prosecution witness : LW- 1 / PW - 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வீரராகவன் (எ) பாபு | Caste | : | |
| Fathers Name | : | அரமாண்டி | Calling | : | |
| Village | : | பெரம்பூர் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 46 |

(Accused Called present)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.2024

முதல் விசாரணை நேரம் காலை 11.40

1. நான் தண்டலம் பஜாரில் VP ஏஜன்சி நடத்தி வருகின்றேன். எங்களது நிறுவனமத்தில் கம்பி, செமண்ட் போன்ற இரும்பு சம்பந்தமான பொருட்களளை விற்பனை செய்துவருகிறன்றோம்.

2. கடந்த 2019வடரும் எங்கள் ஊரை சார்ந்த ஜெகன் என்பவார் இரும்பு சம்பந்தமான பொருளான ஆங்கிள் மற்றும் ஆகிய பொருட்களை வாங்கினார்.

3. அந்த பொருட்கள் அனைத்தும் நான்கு பில் போட்டு அனுப்பப்பட்டது.

4. ஸ்ரீசிட்டி இடத்திற்கு கொண்டு செல்வதாக கூறினார். அந்த பொருட்களளுக்கு காசோலை வழங்குவதாக குறிவிட்டு பொருட்களை எடுத்து சென்றுவிட்டு காசோலை கொடுப்பதாக சொன்னார் ஆனால் காசோலை கொடுக்கவில்லை. ஆனால் காசோலைக்கு உண்டான தொகையை அந்த நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்டுவிட்டார்.

5. அவருக்கு அன்றைதினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் ஆனால் அவரது தொலைபேசி எடுக்கவில்லை மீண்டும் அடுத்த நாள் தான் தொலைபேசி எடுத்து பேசினார். அப்போது இரண்டு நாட்களுக்குள் காசோலை கொடுப்பதாக கூறினார்.

6. அந்த இரண்டு நாடகள் கழித்து காசோலை கேட்ட போது தற்போது என்னால் கொடுக்கமுடியாது என்று கூறினார்.

7. அதன் பின்னிட்டு எனது ஊர்கரார்களிடம் சொல்லி கேட்டபோது அவரது அம்மா மற்றும் அப்பா மற்றும் இருவரும் 10நாட்கள் காலஅவகாசம் கொடுத்தால் பணம் செலுத்தி விடுவோம் என்று கூறினார்.

8. அதன் பின்னிட்டு 10 நாட்கள் கழித்து எதிரியின் அம்மா அப்பாவிடம் கேட்டபோது

நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் இனி என் மகன் பார்த்து கொள்வான்.

9. அதன் பின்னிட்டு ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தோம்.

10. அதன் பின்னிட்டு ஊத்துக்கோட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார். அந்த சமயத்தில் நான் காவல் நிலைய்தில் எனது பொருளையே அல்லது பணத்தையே கொடுக்குமாறு கேட்டேன்.

11. அப்போது எதிரி பொருளை கொண்டு வேலை செய்து விட்டோம் அதனால் எங்ககளால் பொருட்களை திரும்ப தர இயலாது 15 நாட்கள் காலஅவகாசம் வேண்டும் அதற்குள்ளாக பணத்தை திரும்ப செலுத்திவிடுவதாக கூறி எங்கள் எழுத்து மூலமாக எழுதி கொடுத்தார்.

12. நான் அடுத்த நாள் நிறுவனத்திற்கு சென்று பார்த்தபோது எங்களது நிறுவனத்திலிருந்து எடுத்து சென்ற பொருள் அப்படியே எதிரி ஜெகன் எடுத்துக்கொண்ட நிறுவனத்தில் இருந்தது. வேலைக்கு பயன்படுத்தாமல் அப்படியே இருந்தது. அதன் பின் காவல் நிலையத்தில் வந்து தெரிவித்தேன்.

13. அதன் பிறகு பணம் கொடுப்பதாக கூறிவிட்டு 15 நாட்கள் காலஅவகாசம் கேட்டார்கள்.(எதிரி நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று கொண்டு இருக்கும்போது வழக்கறிஞர் அழைத்துசெல்வதற்காக சென்று விட்டார் நீதிமன்றம் கூறியும் சென்று விட்டார் என்பதால் சாட்சி விசாரணை பாதியில் நிறுத்தபட்டது.)

விசாரணை முடிவுற்ற நேரம் 12.0